2013 அக்டோபர் 28]

திசை நோக்கி வணங்குகிறேன். வண்டுராயன்பட்டு, அழிச்சிக்குடி ஊராட்சி ஆதி திராவிட சமுதாய மக்கள் அதிகமாக வசிக்கும் பகுதியாக உள்ள காரணத்தினால், அந்தப் பகுதிவாழ் மக்களின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்படும் என்று சொன்ன மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாட்சிக்கு என்னுடைய தொகுதிவாழ் மக்களின் சார்பாக கோடானுகோடி நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 42, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுரேஷ்குமார், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

**42—**

## பேருந்து வசதி

***6768—திரு. டி. சுரேஷ்குமார்:**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கம் தொகுதி, ஆதிப்பாடி மற்றும் செம்மம்பட்டி கிராமங்களுக்குப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) செங்கம் தொகுதி, ஆதிப்பாடி கிராமம், புறநகர் தடம் 122 E/Q மூலம் சென்னை-ஆதிப்பாடி-தானிப்பாடி வழித்தடத்தில் இரண்டு நடைகளும் மற்றும் தானிப்பாடி-ஆதிப்பாடி வழித்தடத்தில் ஒரு சிற்றுந்துமூலம் தினசரி 14 நடைகளும் நேரடிப் பேருந்து வசதி பெற்றுள்ளது. புறநகர் தடம் 313 திருவண்ணாமலை பீமாரப்பட்டி வழி தானிப்பாடி வழித் தடத்தில் தினசரி 8 நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. செம்மம்பட்டி கிராமத்திற்கு பீமாரப்பட்டிலிருந்து செல்லும் சாலை மிகவும் குறுகலான மண் சாலை ஆகும். கனரக வாகனம் இயக்க இயலாத நிலையில் உள்ளது. பேருந்து போக்குவரத்து வசதிக்கு ஏற்ப இச்சாலை அமைக்கும் பணி நிறைவுபெற்றபின், மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவினைப் பெற்று, இப்பகுதிக்குப் பேருந்து*

வசதியை ஏற்படுத்தித் தர நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. சுரேஷ்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கத் தாரகை அம்மா அவர்களை வணங்குகிறேன். நான் முன்பே கூறியதைப்போல, எனது தொகுதி மக்கள் நான் அம்மாவை சந்தித்தவுடன் "ஆளும் வளரணும், அறிவும் வளரணும் அதுதாண்டா வளர்ச்சி, நீ அம்மாவை சந்திக்க நினைத்ததே நீ எடுத்த சிறப்பான முயற்சி" என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த வகையில், நாராயணன்குப்பம் கிராமத்தில் தடுப்பணையும், குப்பநத்தம் வரையிலே தடுப்பணையும், சாத்தனூர் அணைக்கு பராமரிப்புத் தொகையும், அரசுப் பேருந்து நிற்பதற்கு டெப்போவும், செங்கத்திற்கு ஆர்.டி.ஓ. அலுவலகமும் போன்ற எண்ணற்ற உதவிகளை அளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 4-10-2013 அன்று பட்டாசு வெடித்து, அந்தக் கோர விபத்தில் மூன்று பேர் உயிர்நீத்திருக்கின்றார்கள். ஒருவர் கால் இழந்திருக்கின்றார். அவர்களுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உதவிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். ஆதி திராவிட மக்களின் காவல் தெய்வமாய் விளங்குகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் குடும்பங்களுக்கு உதவி செய்திட வேண்டுமாய் மனப்பூர்வமாக வேண்டி, விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 43, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**43—**

## தடுப்புச் சுவர்

***15279—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

*மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*இராமநாதபுரம் தொகுதி, கீழக்கரையில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள படகுகள் நிறுத்தும் தளத்தின் இருபுறமும் தடுப்புச் சுவர் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*